ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திரு எவ்வுள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திரு எவ்வுள்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரிய திருமொழி – காசையாடை

‡ காசை ஆடை மூடி ஓடிக் ⋆
காதல் செய் தானவன் ஊர் ⋆
நாசம் ஆக நம்ப வல்ல ⋆
நம்பி நம் பெருமான் ⋆
வேயின் அன்ன தோள் மடவார் ⋆
வெண்ணெய் உண்டான் இவன் என்று ⋆
ஏச நின்ற எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.1** ॥

தையலாள் மேல் காதல் செய்த ⋆
தானவன் வாள் அரக்கன் ⋆
பொய் இலாத பொன் முடிகள் ⋆
ஒன்பதோடொன்றும் ⋆
அன்று செய்த வெம் போர் தன்னில் ⋆
அங்கோர் செஞ்சரத்தால் உருள ⋆
எய்த எந்தை எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.2** ॥

முன் ஓர் தூது ⋆
வானரத்தின் வாயில் மொழிந்து ⋆
அரக்கன் மன் ஊர் தன்னை ⋆
வாளியினால் மாள முனிந்து ⋆
அவனே பின் ஓர் தூது ⋆
ஆகி மன்னர்க்காகிப் பெரு நிலத்தார் ⋆
இன்னார் தூதன் என நின்றான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.3** ‖

பந்தணைந்த மெல் விரலாள் ⋆
பாவை தன் காரணத்தால் ⋆
வெந் திறல் ஏறேழும் ⋆
வென்ற வேந்தன் விரி புகழ் சேர் ⋆
நந்தன் மைந்தன் ஆக ஆகும் ⋆
நம்பி நம் பெருமான் ⋆
எந்தை தந்தை தம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.4** ‖

பாலன் ஆகி ஞாலம் ஏழும் உண்டு ⋆
பண்டால் இலை மேல் ⋆
சால நாளும் பள்ளி கொள்ளும் ⋆
தாமரைக் கண்ணன் எண்ணில் ⋆
நீலம் ஆர் வண்டுண்டு வாழும் ⋆
நெய்தலம் தண் கழனி ⋆
ஏல நாறும் பைம் புறவில் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.5** ‖

சோத்தம் நம்பி என்று ⋆
தொண்டர் மிண்டித் தொடர்ந்தழைக்கும் ⋆
ஆத்தன் நம்பி செங்கண் நம்பி ⋆
ஆகிலும் தேவர்க்கெல்லாம் ⋆
மூத்த நம்பி முக்கண் நம்பி என்று ⋆
முனிவர் தொழுதேத்தும் ⋆
நம்பி எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.6** ॥

திங்கள் அப்பு வான் எரி கால் ஆகி ⋆
திசை முகனார் ⋆
தங்கள் அப்பன் சாமி அப்பன் ⋆
பாகத்திருந்த ⋆
வண்டுண் தொங்கல் அப்பு நீள் முடியான் ⋆
சூழ் கழல் சூட நின்ற ⋆
எங்கள் அப்பன் எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.7** ॥

முனிவன் மூர்த்தி மூவர் ஆகி ⋆
வேதம் விரித்துரைத்த புனிதன் ⋆
பூவை வண்ணன் அண்ணல் ⋆
புண்ணியன் விண்ணவர் கோன் ⋆
தனியன் சேயன் தான் ஒருவன் ஆகிலும் ⋆
தன் அடியார்க்கினியன் ⋆
எந்தை எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.8** ॥

பந்திருக்கும் மெல் விரலாள் ⋆
பாவை பனி மலராள் ⋆
வந்திருக்கும் மார்வன் ⋆
நீல மேனி மணி வண்ணன் ⋆
அந்தரத்தில் வாழும் ⋆
வானோர் நாயகனாய் அமைந்த ⋆
இந்திரற்கும் தம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.9** ॥

‡ இண்டை கொண்டு தொண்டர் ஏத்த ⋆
எவ்வுள் கிடந்தானை ⋆
வண்டு பாடும் பைம் புறவில் ⋆
மங்கையர் கோன் கலியன் ⋆
கொண்ட சீரால் தண் தமிழ் செய் மாலை ⋆
ஈர் ஐந்தும் வல்லார் ⋆
அண்டம் ஆள்வதாணை ⋆
அன்றேல் ஆள்வர் அமர் உலகே ॥ **2.2.10** ॥

### திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – நான்முகன் திருவந்தாதி

‡ நாகத்தணைக் குடந்தை ⋆
வெஃகா திருவெவ்வுள் ⋆
நாகத்தணை அரங்கம் பேர் அன்பில் ⋆
நாகத்தணைப் பாற்கடல் கிடக்கும் ⋆
ஆதி நெடுமால் ⋆
அணைப்பார் கருத்தன் ஆவான் ॥ **36** ॥

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

மா மலர் மேல்
அன்னம் துயிலும் அணி நீர் வயல் ஆலி ⋆
என்னுடைய இன் அமுதை எவ்வுள் பெரு மலையை ⋆
கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை ⋆
மின்னை இரு சுடரை வெள்ளறையுள் கல்லறை மேல்
பொன்னை ⋆ மரதகத்தைப் புட்குழி எம் போர் ஏற்றை ⋆
‡மன்னும் அரங்கத்தெம் மா மணியை ‖ **63** ‖

**திரு கனகவல்லி சமேத வீரராகவப்பெருமாள் திருவடிகளே சரணம்**